**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**

**வழக்கு எண். STC 544 /2023**

**வழக்கு சாட்சி. அ.சா.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | கார்த்திக் | **வயது** | : | 26 /2026 |
| **தந்தை பெயர்** | : | ஜெகநாதன் | **தாலுகா** | : | அறந்தாங்கி |
| **கிராமம்** | : | அரசர்குளம் | **தொழில்** | : | வெல்டிங் |

**Solemnly affirmed by Tmt.Sahanathirushya, Grade-III Bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873.**

**Accused present. Counsel Present.**

**As per Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identiy of the witness verified with their identity card.**

**Aathar card of the Witness verified.**

**<u>தேதி : 19.02.2026</u>**

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:**

நான் மேற்படி முகவரியில் வசித்து வெல்டிங் வேலை செய்து வருகிறேன். கடந்த 18.09.2022 ஆம் தேதி மாலை சுமார் 06.30 மணியளவில் நான் எனக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் சுப்பிரமணிபுரம் இந்தியன் பெட்ரோல் பங்க் அருகில் சாலையில் இடதுபுறமாக சென்று கொண்டிருந்த போது எனக்கு வலதுபுறமாக இருசக்கர வாகனத்தில் வந்த நபர் என் மீது மோதிவிட்டார். அவர் யார் என்று எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. பின்னர் எனக்கு விபத்தில் காயம் ஏற்பட்டதால் நான் அறந்தாங்கி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் அளித்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிஸ்சார் என்னை விசாரித்தனர். நடந்த விவரம் பற்றி சொன்னேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது என்றால், சரிதான். எதிரி வாகனத்தினை அதி வேகமாகவும், கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை இயக்கவில்லை என்றால், சரிதான். விபத்து நடந்ததாக கூறப்படும் நேரம் இரவு நேரம்

என்பதால் எதிரியை நான் அடையாயம் காணவில்லை என்றால், சரிதான். எதிரிக்கும், குற்ற சம்பவத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

**ஒம்/−எஸ்.சக்திநாராயணமூர்த்தி,**
**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**

**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண். STC 544 /2023**
**வழக்கு சாட்சி. அ.சா.2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | முத்துகுமார் | **வயது** | : | 30 /2026 |
| **தந்தை பெயர்** | : | வீரப்பன் | **தாலுகா** | : | அறந்தாங்கி |
| **கிராமம்** | : | மாணிக்ககுடியிருப்பு அரசர்குளம் | **தொழில்** | : | கொத்தனார் |

**Solemnly affirmed by Tmt.Sahanathirushya, Grade-III Bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873.**

**Accused present. Counsel Present.**

**As per Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identiy of the witness verified with their identity card.**
**Aathar card of the Witness verified.**

**<u>தேதி : 19.02.2026</u>**

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:**

நான் மேற்படி முகவரியில் வசித்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. இவ்வழக்கு சம்பவமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிஸ்சார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியானவர் அரசு வழக்கை ஆதரிக்காமல் சாட்சியம் அளித்தால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 157 Bharatiya Sakshya Adhiniyam 2023 சட்டத்தின் படி அரசு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார். அதனால் நீதியின் பொருட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது.**

கடந்த 18.09.2022 ஆம் தேதி மாலை சுமார் 06.30 மணியளவில் கார்த்திக் அவருக்கு சொந்தமான TN 55 AZ 8521 என்ற பதிவெண் கொண்ட TVS SPORT இருசக்கர வாகனத்தில் மாத்திரை வாங்குவதற்காக கார்த்திக் இருசக்க வாகனத்தினை ஓட்ட நான் இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து சுப்பிரமணியபுரத்திற்கு சென்று கொண்டிருந்த போது எங்களுக்கு எதிரே மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி எதிரே வந்த பெயர் விலாசம் கேட்டு அறிந்த ராஜமன்னன் என்பவர் அவருடைய இருசக்கர வாகனத்தில் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் வந்து கார்த்திக் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தில் மோதி விபத்தினை ஏற்படுத்தினார் என்றும், அதில் கார்த்திக்–கு வலது தொடையிலும், வலது பக்க கையிலும் உள்காயம் ஏற்பட்டது என்றும், இடது பக்க முழங்கை, முழங்காலில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டது என்றும், பின்னர் காயம் பட்ட கார்த்திக்கை 108 ஆம்புலன்ஸ் மூலம் அறந்தாங்கி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தேன் என்று போலிஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எனக்கே தெரிந்த காரணத்திற்காக ஆஜர் எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

இல்லை.

**மறுவிசாரணை:**

இல்லை

திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

**ஒம்/–எஸ்.சக்திநாராயணமூர்த்தி,**
**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**